<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>
<u>ஜெயங்கொண்டம்.</u>
<u>C.C.No. 80/2025</u>

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திருமதி. ரெத்தினம்மாள் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.ரெத்தினம்மாள் | வயது | : | 58/26 |
| த/பெ/க.பெ./ | : | அம்மாசி | தொழில் | : | **கூலிவேலை** |
| ஊர் | : | **அமிர்தராயன்கோட்டை** | நிலை | : | LW 01/PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் அமிர்தராயன்கோட்டையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது ஊரைச்சேர்ந்தவர். சுமார் ஒன்று அரை வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் மாலை எனது கணவர் அம்மாசி புல் அருப்பதற்காக சென்றிருந்தார். என் கணவர் புல்லை அருத்துகொண்டு இருந்தபோது ஆஜர் எதிரி அங்கு வந்து எப்படி நீ புல் அருக்கலாம் என்று கேட்டுகொண்டே கையில் வைத்திருந்த அருவாளால் என் கணவரின் இடது பக்க காதுக்கு கீழே வெட்டிவிட்டு

உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று சொன்னதாக என் கணவர் கூறினார். பின்னர் எனது கணவரை நான் 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனை ஜெயங்கொண்டத்திற்கு அழைத்து சென்றேன். சிகிச்சையின் போது எனது கணவர் பேசமுடியாத நிலையில் இருந்ததால் நான் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான் **அந்த புகார்வாக்குமூலம் அ.த.சா.ஆ. 01 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு/வி. இல்லை.**

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.